## திருத்தணி கோவிலுக்கு ரூ.4 கோடியில் புதிய வெள்ளித்தேர்

★ காசிக்கு 200 பேரை அழைத்துச் செல்ல ஏற்பாடு ★ 12 அம்மன் கோவில்களில் 108 விளக்கு பூஜை

# ஆயிரம் கோவில்களில் ரூ.500 கோடியில் திருப்பணி: அமைச்சர் சேகர்பாபு அறிவிப்பு

சென்னை, மே 5–

1,000 கோவில்களில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெறும் என்றும், திருத்தணி சுப்பிரமணிய சாமி கோவிலுக்கு ரூ.4 கோடியில் புதிய வெள்ளித்தேர் உருவாக்கப்படும் என்றும் சட்டசபையில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறினார்.

தமிழக சட்டசபையில் நேற்று, இந்து சமய அறநிலையத்துறை தொடர்பான புதிய அறிவிப்புகளை வெளியிட்டு, அத்துறையின் அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேசியதாவது:–



நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் ஏற்கனவே 5 கோவில்களில் நடந்து வருகிறது. இந்த திட்டமானது, தற்போது விரிவுபடுத்தப்பட்டு ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவில் மற்றும் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் ஆகிய 3 கோவில்களிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

### 10 கோவில்களில் அன்னதானத் திட்டம்

10 கோவில்களில் அன்னதானத் திட்டம் புதிதாக தொடங்கப்படும். மேலும், நெல்லையில் உள்ள நெல்லையப்பர் கோவிலில் தற்போது வழங்கப்பட்டு வரும் அன்னதான திட்டத்தை விரிவுபடுத்தி முக்கிய திருவிழா நாட்களில் நாள் ஒன்றுக்கு 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

கோவில்களுக்கு தானமாக வழங்கப்படுகின்ற கால்நடைகளை பராமரிக்க நவீன வசதிகளுடன் கூடிய கோசாலை திருவள்ளூர் மாவட்டம் ஆவடி வட்டம் கோயில்பதாகை சுந்தரராஜபெருமாள் கோவிலுக்கு சொந்தமான 25 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் புதிதாக ஏற்படுத்தப்படும். இதற்கென ரூ.20 கோடி செலவிடப்படும்.

கோவில்களில் அன்னை தமிழில் அர்ச்சனை செய்யும் அர்ச்சகர்களை ஊக்குவிக்கும் விதமாக சிறப்பு கட்டணச்சீட்டுகள் அறிமுகப்படுத்தப்படும். இதற்கான அர்ச்சனை கட்டணத்தில் 60 சதவீதம் அர்ச்சகருக்கு பங்குத்தொகையாக வழங்கப்படும்.

கோவில்களில் நடைபெறும் திருமணங்களில் மணமக்களில் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருப்பின் கட்டணம் ஏதுமின்றியும், கோவில் மண்டபங்களில் நடக்கும் திருமணங்களுக்கு வாடகையும் இன்றி திருமணங்கள் நடத்திட அனுமதிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நடைபெறவுள்ள திருமணங்களில் மணமக்களுக்கு புத்தாடைகள் கோவில் சார்பாக வழங்கப்படும்.

ஒரு இணை ஆணையர் மண்டலத்திற்கு 25 இணைகள் வீதம் 20 மண்டலங்களில் ஆண்டு தோறும் 500 இணைகளுக்கு கோவில்களில் திருமணங்கள் நடத்தப்படும். இதற்கான செலவினத்தை கோவில்களே ஏற்கும். மாதந்தோறும் பவுர்ணமி தினங்களில் 12 பிரசித்திப்பெற்ற அம்மன் கோவில்களில் 108 திருவிளக்கு பூஜைகள் நடத்தப்படும். இதற்கான செலவில் நான்கில் ஒரு பங்கு மட்டும் பக்தர்களிடம் கட்டணமாக பெறப்படும்.

ஒரு கால பூஜைத்திட்டத்தின்கீழ் நிதி வசதியற்ற 12 ஆயிரத்து 959 கோவில்கள் பயன்பெறுகின்றன. இந்த ஆண்டு நிதி வசதியற்ற மேலும் 2 ஆயிரம் கோவில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இதற்காக ரூ.40 கோடி அரசு மானியம் வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தில் சேர்க்கப்படும் 2 ஆயிரம் கோவில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு மாத உதவித்தொகையாக ரூ.1,000 வழங்கப்படும்.

### 5 சிவாலயங்களில் சிவராத்திரி விழா

சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவில் சார்பாக மகா சிவராத்திரி விழா கடந்த ஆண்டு வெகுசிறப்பாக நடத்தப்பட்டு பக்தர்களின் அமோக வரவேற்பினை பெற்றது. அதனைத்தொடர்ந்து இவ்வாண்டு முதல் ஆண்டுதோறும் 5 சிவாலயங்கள் சார்பாக மகா சிவராத்திரி விழா நடத்தப்படும்.

நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டம் துளசியாப்பட்டினம் கிராமம் அவ்வையார் விஸ்வநாதசாமி கோவிலில் தமிழ் மூதாட்டி அவ்வையாருக்கு ரூ.1 கோடி செலவில் மணிமண்டபம் அமைத்து, அவரது பாடல்கள் கல்வெட்டாக பதிக்கப்படும்.

தற்போது, அவ்வையாருக்கு பங்குனி மாதம் சதய நட்சத்திரத்தன்று 2 நாட்கள் அரசு விழாவாக கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு முதல் இவ்விழா 3 நாட்களுக்கு வெகுசிறப்பாக நடத்தப்படும். பெரிய புராணம் கண்ட சேக்கிழார் பிறந்த தலமான குன்றத்தூரில் அன்னாரின் திருநட்சத்திரத்தையொட்டி ஆண்டுதோறும் 10 நாட்களுக்கு விழா கொண்டாடப்படுகிறது. அதில் ஒரு நாள் மட்டும் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல், 3 நாட்களுக்கு அரசு விழாவாக வெகு சிறப்பாக நடத்தப்படும்.

கோவில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக கோவில்களின் தல வரலாறு, தலபுராணம், கோவில்களின் சிறப்பு அம்சங்கள், திருவிழா நிகழ்வுகள், கோவில் அருகாமையில் உள்ள மற்ற கோவில்களின் வழித்தடங்கள் பக்தர்கள் அறியும் வகையில் பெரிய திரையில் சென்னை, மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவிலில் திரையிடப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை விரிவுபடுத்தி இதர 47 முதுநிலை கோவில்களில் திரையிட நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை, சைதாப்பேட்டை காரணீஸ்வரர் கோவில் உட்பட 19 கோவில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள், கோவில் அலுவலக கட்டிடங்கள் ரூ.4 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

### வெள்ளி, தங்கத் தேர்கள்

சென்னை மயிலாப்பூர், கபாலீசுவரர் கோவில் பணியாளர்கள் குடியிருப்புகள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். சென்னை, மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் அமைக்கப்படும். திருத்தணி சுப்பிரமணியசாமி கோவிலுக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் புதிய வெள்ளித்தேர் உருவாக்கப்படும்.

புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் கோவிலுக்கு புதிய தங்கத்தேர் ரூ.6 கோடி செலவில் உருவாக்கப்படும். நங்கநல்லூர் ஆஞ்சநேய சாமி கோவிலுக்கு புதிய தங்கத்தேர் ரூ.6 கோடி செலவில் உருவாக்கப்படும்.

1,000 கோவில்களில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் திருப்பணி, பராமரிப்பு, புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

காஞ்சீபுரம், ஏகாம்பரநாதர் கோவிலில் மேற்கு ராஜகோபுரம் புதுப்பித்தல், சன்னதிகள் பழுது பார்த்து புதுப்பித்தல், ஆயிரங்கால் மண்டபம் மேல்தளம் மற்றும் தரைத்தளம் பழுதுபார்த்தல் உள்ளிட்ட பல்வேறு திருப்பணிகள் ரூ.17 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

சென்னை, தங்கசாலை ஏகாம்பரேஸ்வரர் கோவிலில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். திருத்தணி சுப்பிரமணியசாமி கோவிலின் உபகோவிலான பஞ்சசபைகளில் ஒன்றான ரத்தின சபையாக விளங்கும் திருவாலங்காடு வடாரண்யேஸ்வரர் கோவிலில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

### கலாச்சார மையம்

சென்னை, வில்லிவாக்கம் தேவிபாலியம்மன் கோவிலில் ரூ.1½ கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். சென்னை அயனாவரம் கரியமாணிக்க பெருமாள் கோவிலில் ரூ.1½ கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

காஞ்சீபுரம் மாவட்டம், பாப்பான்சத்திரம், காசி விஸ்வநாதர் மற்றும் வேணுகோபாலசாமி கோவிலில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், வரமுக்தீஸ்வரர் கோவிலில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். எழும்பூர் சீனிவாசப்பெருமாள் கோவிலில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

பழனி கோவிலுக்கு பங்குனி உத்திரத்திற்கு பாத யாத்திரையாக செல்லும் பக்தர்களுக்கு வழித்தடங்களில் 20 நாட்களுக்கு 10 ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்படும்.

### பக்தர்களுக்கு பிரசாதம்

இந்த ஆண்டு முதல் மேலும் 5 கோவில்களில் பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டம் குலசேகர பட்டிணம் முத்தாரம்மன் கோவிலில் ரூ.10 கோடி செலவில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.

27 கோவில்களில் ரூ.80 கோடியில் புதிய திருமண மண்டபங்கள் அமைக்கப்படும்.

பெரியபாளையம் அம்மன் கோவிலுக்கு ரூ.8 கோடியில் புதிய தங்கத்தேர் உருவாக்கப்படும்.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலின் கிழக்குப் பகுதியில் ரூ.20 கோடியில் கடல் அரிப்பு தடுப்பு பணி செயல்படுத்தப்படும்.

காசிக்கு 200 பேர்

ராமேஸ்வரம் கோவிலில் இருந்து காசி விஸ்வநாதர் கோவிலுக்கு இந்த ஆண்டு 200 பேர் ஆன்மீக பயணம் அழைத்துச் செல்லப்படுவார்கள். இதற்கான 50 லட்சம் ரூபாய் செலவை அரசே ஏற்கும்.

செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலி ஆளவந்தார் திருவரசு ரூ.1 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

தமிழர் பண்பாடு மற்றும் கலாசாரத்தை விளக்கும் வகையில் கலைநிகழ்ச்சிகள் நடத்துவதற்கான கலாசார மையம் முதற்கட்டமாக சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் அமைக்கப்படும். அம்மையத்தில் ஆன்மிக நூலகமும் அமைக்கப்படும். மேலும், மீட்கப்பட்ட தெய்வத்திருமேனிகள் அம்மையத்தில் பாதுகாப்பாக வைக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தி.மு.க.வை ஆன்மிகத்துக்கு எதிராக இருப்பதுபோல் காட்ட முயற்சி

## சட்டசபையில் ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை, மே 5–

தி.மு.க.வை ஆன்மிகத்துக்கு எதிராக இருப்பதுபோல் காட்ட முயற்சி நடப்பதாக சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றம்சாட்டி பேசினார்.

தமிழக சட்டசபையில் நேற்று இந்து சமய அறநிலையத் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை மீதான மானியக் கோரிக்கை மீது விவாதம் நடைபெற்றது.

இந்த விவாதத்தை தொடங்கிவைத்து அண்ணா தி.மு.க. உறுப்பினர் நத்தம் விஸ்வநாதன் (நத்தம் தொகுதி) பேசியதாவது:–

இந்து சமய அறநிலையத் துறை மற்ற துறைகளைவிட முக்கியமானது. சிறப்பு வாய்ந்த இந்த துறை, புனிதமான துறை ஆகும். 1959–ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் அடிப்படையில், இந்த துறை உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

அண்ணா தி.மு.க. ஆட்சி காலம்தான் இந்து சமய அறநிலையத் துறையின் பொற்காலம் ஆகும். மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா, ஆன்மிக நம்பிக்கை கொண்டிருந்ததால், இந்த துறையில் சிறப்பான திட்டங்களை கொண்டு வந்தார்.

அன்னதான திட்டம்

பசிப்பிணியை போக்க திருக்கோவில்களில் அன்னதான திட்டத்தை கொண்டு வந்தார். 2002–ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் அதன்பிறகு விரிவுபடுத்தப்பட்டது. பொதுவாக, அண்ணா தி.மு.க. ஆட்சி காலத்தில் கொண்டு வந்த திட்டங்களை முடக்குவீர்கள் அல்லது ரத்து செய்வீர்கள். ஆனால், அன்னதான திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 10 ஆண்டுகால அண்ணா தி.மு.க. ஆட்சியில் 11 ஆயிரம் கோவில்களில் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) நடத்தப்பட்டுள்ளது. கோவில் திருப்பணிகளுக்கு ரூ.25 ஆயிரம் வழங்கப்பட்டதை, ரூ.50 ஆயிரமாகவும், ரூ.1 லட்சமாகவும் உயர்த்தி வழங்கியது அண்ணா தி.மு.க. ஆட்சியில்தான்.

இவ்வாறு அவர் பேசிக் கொண்டிருந்தபோது, அவை முன்னவர் துரைமுருகன் குறுக்கிட்டு பேசினார். அப்போது நடந்த விவாதம் வருமாறு:

### மதச்சார்பற்ற அரசு

உறுப்பினர் நத்தம் விஸ்வநாதன்: கோவில் திருப்பணிகளுக்கு வழங்கும் நிதி யானை பசிக்கு சோளப் பொறியாகும். கடலில் கரைத்த பெருங்காயம் போல் உள்ளது. எனவே, அந்தத் தொகையை ரூ.5 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும். கோவில்களில் உள்ள திருக்குளப் பணிகளையும், திருத்தேர் பணிகளையும் செய்தது அண்ணா தி.மு.க. அரசுதான். அதை நீங்களும் தொடருகிறீர்கள்.

மத்திய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும் மதச்சார்பற்ற அரசாக இருக்க வேண்டும். அனைத்து மதத்தையும் சமமாக பார்க்க வேண்டும். முதலமைச்சர், கடவுள் இல்லை என்று மறுப்பவரா?.

சபாநாயகர் அப்பாவு: அது ஒவ்வொருவரின் சொந்த விருப்பம்.

உறுப்பினர் நத்தம் விஸ்வநாதன்: முதலமைச்சர் ஆன்மிகவாதியா?.

அமைச்சர் எ.வ.வேலு: அவரது தனிப்பட்ட சுதந்திரம் அது. இந்துக்களால் நேசிக்கப்படும் தலைவராக அவர் உள்ளார். மடாதிபதி தலைவர்கள் எல்லாம் ஒன்றுகூடி, முதலமைச்சரை சந்தித்து பேசினார்கள். பின்னர் அவர்கள், தமிழகத்தில் ஆன்மிக ஆட்சி நடக்கிறது என்று கூறினார்கள். எல்லா மதத்துக்கும் சொந்தக்காரர். உங்களது சொந்தக் கருத்தை நீங்கள் கேட்கிறீர்கள்.

முதலமைச்சர் ஸ்டாலின்: அண்ணா தி.மு.க. உறுப்பினர் இங்கே முதலமைச்சர் விளக்கம் சொல்ல வேண்டும் என்கிறார். எங்கள் கூட்டணியின் பெயரே மதசார்பற்ற கூட்டணிதான்.

(தொடர்ந்து உறுப்பினர் நத்தம் விஸ்வநாதன் அதே கருத்தை வலியுறுத்தி பேசினார்)

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: தனிப்பட்ட ஒருவருடைய விருப்பத்தை சொல்ல யாருக்கும் உரிமை இல்லை. எம்மதமும் சம்மதம் என முதலமைச்சர் செயல்படுகிறார். இதுவரை, இந்துக்களை பற்றி எந்தக் கருத்தையும் தவறாகச் சொல்லவில்லை. மதத்தை வைத்து அரசியல் செய்ய நினைப்பவர்கள் போல் உங்கள் பேச்சு உள்ளது.

(இந்த நேரத்தில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி எழுந்து ஒரு கருத்தை பதிவு செய்தார். அது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டது)

சபாநாயகர் அப்பாவு: ஒரு அரசின் கொள்கை முடிவை தெளிவாக கூறிவிட்டார்.

### தீபாவளிக்கு ஏன் வாழ்த்து சொல்லவில்லை?

எடப்பாடி பழனிசாமி: நாங்கள் மதங்களுக்கு எதிராக பேசவில்லை. முதலமைச்சர் என்பவர் அனைவருக்கும் பொதுவானவர். எல்லா மத விழாவுக்கும் வாழ்த்து தெரிவிக்கும் முதலமைச்சர் ஏன், தீபாவளி பண்டிகைக்கு வாழ்த்து சொல்வதில்லை?.

உறுப்பினர் நத்தம் விஸ்வநாதன்: மதசார்பற்ற கூட்டணி என்று பெயர் வைத்தால் மட்டும் போதாது, நடைமுறையில் இருக்க வேண்டும்.

முதலமைச்சர் ஸ்டாலின்: இன்றைக்கு திட்டமிட்டே ஒருசிலர் தி.மு.க.வை ஆன்மிகத்துக்கு எதிராக இருப்பது போல் காட்ட முயற்சி செய்கிறார்கள். இது பெரியார் ஆட்சி, அண்ணா ஆட்சி, தலைவர் கருணாநிதி ஆட்சி. ஒரே வரியில் சொல்ல வேண்டும் என்றால், இதுதான் திராவிட மாடல் ஆட்சி. யாருக்கும் நாங்கள் ஒருபோதும் அடிபணிய மாட்டோம்.

எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஓ.பன்னீர்சொல்வம்: விவாதம் எதையோ நோக்கிச் செல்கிறது. பேரறிஞர் அண்ணா, ஒன்றே குலம், ஒருவனே தேவன் என சொன்னார். எனவே, எம்மதமும் சம்மதம்.

இவ்வாறு விவாதம் நடந்தது.


### டிமாண்ட் நோட்டீஸ்

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (மேற்சொன்ன சட்டம்) பிரிவு 13 (2) மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002 (மேற்சொன்ன விதிகள்) விதிகள் 3(1)ன் கீழ். கடன்தாரர்கள், டிமாண்ட் நோட்டீசில் குறிப்பிட்டுள்ள தொகையை திரும்பச் செலுத்துமாறு மேற்கண்ட சட்டம், பிரிவு 13(12) மற்றும் மேற்சொன்ன விதிகளின் விதி 3–ன்படி IIFL ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டின் (IIFL HFL) (முன்னர் இந்தியா இன்போலைன் ஹவுசிங் பைனான்ஸ் லிட்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மேற்கண்ட சட்டம் பிரிவு 13(2)–ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பி உள்ளார். இதில் தொடர்புடைய கடன்தாரர்கள் இந்த அறிவிப்பு வெளியான தேதியில் இருந்து 60 நாட்களுக்குள் கடன் தொகையை திரும்ப செலுத்துமாறு மீண்டும் ஒரு முறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். செலுத்த வேண்டிய தொகை, டிமாண்ட் நோட்டீஸ் தேதியில் இருந்து தொகையை செலுத்தும் நாள் வரையிலான மேலும் வட்டி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. கடன்தாரர்களின் விவரங்கள், டிமாண்ட் நோட்டீஸ் தேதி அன்று உள்ள நிலுவைத் தொகை மற்றும் கடன் தொகையை திரும்ப செலுத்துவதற்காக அளிக்கப்பட்ட பத்திரம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர்கள் பெயர் | டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் தொகை | ஈடுபெற்ற ஆஸ்திகள் விவரம் (அசையா சொத்துகள்) |
|---|---|---|
| திரு. விஜய் ஆனந்த் N, திருமதி அண்ணாமலை செல்வி P (புராஸ்பெக்ட் எண். 799235 & 918366) | 30 ஏப்ரல் 2022 புராஸ்பெக்ட் எண். 799235 ரூ.11,42,407/– (ரூபாய் பதினோரு லட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து நானூற்று ஏழு மட்டும்), புராஸ்பெக்ட் எண். 918366 ரூ.4,09,362/– (ரூபாய் நான்கு லட்சத்து ஒன்பதாயிரத்து முன்னூற்று அறுபத்திரண்டு மட்டும்) | மனை எண். 3/4680 உள்ள சொத்து மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். விஸ்தீரணம் 473 சதுர அடி. சர்வே எண். 251, EWS–A–டைப், மணலி பேஸ்–1 திட்டம், சடையன்குப்பம் கிராமம், சென்னை, தமிழ்நாடு 600 103 |

மேற்கண்ட கடன்தாரர்கள் IIFL HFL–க்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்த தவறினால், மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மேற்சொன்ன ஈடு பெற்ற ஆஸ்திகள் மீது IIFL HFL நடவடிக்கை மேற்கொள்ளும். இதனால் ஏற்படும் விளைவுகள் மற்றும் கட்டணங்கள் கடன்தாரர்களையே சேரும். மேற்கொண்டு விவரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கிளை அலுவலகம்:–எண்.1, அலுவலகம் எண்.3இ, 3வது தளம், கென்காஸ் டவர், குரோமா ஷோரூமுக்கு மேலே, வடக்கு உஸ்மான் சாலை, ராமகிருஷ்ணா தெரு,தி.நகர், சென்னை, தமிழ்நாடு, 600017/அல்லது கார்ப்பரேட் அலுவலகம்: ஐஐஎப்எல் டவர், மனை எண். 98, உத்யோக் விஹார், பேஸ்–IV, குர்கான், ஹரியானா அவர்களை அணுகலாம்

இடம் : சென்னை தேதி: 05.05.2022 ஒப்பம்/–அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஐஐஎப்எல் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டுக்காக



### SHRIRAM TRANSPORT FINANCE CO LTD

PAMMAL BRANCH VEHICLE FOR SALE

| S.NO. | VEH.NO. | MAKE | MODEL |
|---|---|---|---|
| 1. | TN05AR-7942 | ASHOK LEYLAND AL DOST | 2012 |
| 2. | TN85K6013 | MAHINDRA XYLO-P | 2019 |

CONTANCT NO 9841329841, 9094341312



### பொது அறிவிப்பு

இந்த பொது அறிவிப்பு மூலம் கூறுவது என்னவென்றால் எனது கட்சிக்காரர் திரு.K. விமல் கருணா த/பெ. கருணா, என்பவர் சென்னை 600043, ஆஞ்சிநேயர் கோயில் தெரு, இசா பல்லாவரம், எண்.24, என்ற விலாசத்தில் உள்ள எனது கட்சிகாரருக்கு சுமார் 86 வயதிருக்கும். எனது கட்சிக்காரரின் தாயார் திருமதி. விஜயா அவர்கள் திருமதி.நீலாவதி அம்மாள் (7), திரு.ஜி.டில்லிபாபு (2), திருமதி.ஜி.லதா (3) மற்றும் திரு.சுந்தர் பாபு ஆகிய நாள்வரிடமிருந்து இசா பல்லவாரம் கிராமம், சர்வே எண்.49/2A,2A,1C ஆகிய சர்வே எண்களில் அடங்கிய 558 சதுரடி காலிமனையினை கிரையமாக 09.09.1992 தேதியில் ஆவண எணண்.3904/1992என்ற எண்ணாக எழுதி பெறப்பட்ட சொத்தின் அசல் ஆவணமும், எனது கட்சிக்காரரின் தாயார் திருமதி.K.விஜயா அவர்கள் திரு.எத்திராஜ் அவர்களின் குமாரர் திரு.தேவநாதன் அவர்களிடமிருந்து இசா பல்லவாரம் கிராமம், சர்வே எண்.49/1A/1A4C ஆகிய சர்வே எண்களில் அடங்கிய 629 சதுரடி காலிமனையினை கிரையமாக 16.09.1998 தேதியில் ஆவண எண்.2882/1998 என்ற எண்ணாக எழுதி பெறப்பட்ட சொத்தின் அசல் ஆவணமும் மற்றும் இசா பலலாவரம் கிராமம், சர்வே எண்.49/2A/1A/10 அடங்கிய விஸ்தீரணம் 381 சதுரடி காலிமனையை எனது கட்சிகாரரின் மாமனார் திரு.இராமலிங்கம் அவர்கள் திரு.தணிகாசல முதலியார் அவர்களின் குமாரர் திரு.ராஜேந்திரன் அவர்களிடமிருந்து பொது அதிகார ஆவணத்தின் மூலம் 10.18.1998 தேதியில் புத்தகம்4 ஆகவும், மேற்படி ஆவணங்கள் பல்லாவரம் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை மொத்தமாக ஜெராக்ஸ் எடுப்பதற்காக 21.04.2022 அன்று மதியம் 18.00 மணியளவில் குரோம்பேட்டை பாலாஜி மருத்துவமனைக்கு எதிரில் உள்ள நியு காலனி, 8 வது மெயின் ரோடு அமைந்துள்ள ஜெராக்ஸ் கடைக்கு ஜெராக்ஸ் எடுக்க சென்றேன். ஜெராக்ஸ் கடைக்கு சென்று பார்த்த போது மேற்படி பத்திரங்களை காணவில்லை. உடனே எனது கட்சிக்காரர் திரும்பி வந்து வழி முழுவதும் தேடினார். வீட்டிற்கும் சென்று பத்திரத்தை தேடி பார்த்தேன். வீட்டிலும் இல்லை. மேலும் பத்திரத்தை எங்குத் தேடியும் கிடைக்கவில்லை. அதன் பொருட்டு எனது கட்சிக்காரர் மிகுந்த மனவேதனை அடைந்துள்ளார். மேற்படி ஒரிஜனல் பத்திரத்தை கண்டெடுப்பவர்கள் எனக்கோ அல்லது எனது கட்சிக்காரருக்கோ தெரிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(K RATHI DEVI B.E. B.L.)
Advocate
No.10, 294 Main Road, New Colony,
Chromepet, Chennai. 600 044
Cell No. 9790853185



**2வது நீதிபதி**
**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம், சென்னை**
**M.C.O.P.No.1058/2021**

P.மாணிக்கம் ...மனுதாரர்

எதிர்

1) முகமது இஸ்லாம்
2) கோ டிஜிட் ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடெட்
... எதிர்மனுதாரர்கள்

பெறுநர்
முகமது இஸ்லாம்,
வில் கன்வாரியா, பி/ஓ ஜெய்தாபூர்,
பி/எஸ் கௌரா சௌரஹா
பல்ராம்பூர், உத்திரப்பிரதேசம்–271201

மேற்கண்ட விபத்து இழப்பீட்டு வழக்கு தங்கள் வருகைக்காக வரும் 05.08.2022 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று காலை 10.30 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் தாங்கள் நேரில் ஆஜராக வேண்டும். தவறினால் தீர்ப்பு தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக வழங்கப்படும் என்பதை அறியவும்.

T.Arumugam
மனுதாரரின் வழக்கறிஞர்



**BEFORE THE II ADDITIONAL FAMILY COURT AT CHENNAI**
**H.M.O.P.No. 418/2022**

D.Murugan, S/o.Devaraj
No.21/11, 7th Street,
Chandrasekar Nagar,
Kodingaiyur, Chennai–600 118
...Petitioner

Vs

1. S.Durga Devi,
D/o.(Late) Satharajan (Father)
Mrs. Selvi (Mother) & Another
...Respondents

To
Mohan, S/o.Raja Mohan,
C/o.Madhan, No.76,
Perumal Kovil Street,
Uthirakandigai, Ponneri,
Thiruvallur District. R2

Please take notice that in the above matter I am the Petitioner has filed an application in H.M.O.P.No. 418/2022 to Pass a decree of divorce by dissolving the marriage solemnized on 09.07.2007 in Arulmigu Durga Lakshmi Thirumana Mandapam, at No.7, Manali Chinnaya Mudali Thottam, 2nd Street, Old Washermenpet, Chennai–600 021, between the petitioner and the 1st Respondent on the Ground of Adultery and Cruelty caused by the 1st Respondent by having illegal relationship with you (2nd Respondent) against the petitioner and other reliefs. The Hon'ble II Addl. Family Court at Chennai, has ordered notice to you returnable by 12.05.2022 at 10.15 a.m.

It is therefore requested you to appear before the above said Hon'ble Court in the said date and time in peron or through your Counsel if say any objection, failing which the matter will be decided set ex-party on your absence.

**D.Murugan,**
Petitioner



Veranda

CIN: U74999TN2018PLC125880

**பதிவு அலுவலகம்: 34, திருமலை சாலை, தி நகர், சென்னை, தமிழ்நாடு 600 017** | +91 44 4296 7777 |www.verandalearning.com

### காணொலி காட்சி (VC)/பிற ஆடியோ காட்சி முறை (OAVM) மூலம் நடைபெறும் அசாதாரண பொதுக் கூட்டம் மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தகவல் குறித்த அறிவிப்பு

நிறுவனத்தின் அசாதாரண பொதுக் கூட்டத்தை கூட்டுவதற்காக அனுப்பப்படும் அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள வர்த்தகம் தொடர்பாக பரிவர்த்தனை மேற்கொள்வதற்காக வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட்டின் உறுப்பினர்களுக்கான அசாதாரண பொதுக் கூட்டம் ('EGM') வெள்ளிக்கிழமை, மே 27, 2022 அன்று நண்பகல் 12.00 மணிக்கு காணொலி காட்சி ('VC')/பிற ஆடியோ காட்சி முறை ('OAVM') மூலம் நடைபெறும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கோவிட்19 தொற்று நோய் மற்றும் சமூக இடைவெளியை உறுதிசெய்வதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் ("MCA") ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் நேரடியாக பங்கேற்காமல் VC அல்லது OAVM மூலம் அசாதாரண பொதுக் கூட்டத்தை நடத்த அனுமதித்துள்ளது. நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன்கீழ் கட்டமைக்கப்பட்ட விதிகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015 மற்றும் எம்சிஏ சுற்றறிக்கை எண்கள் ஏப்ரல் 08, 2020 தேதியிட்ட 14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட 17/2020, மே 05, 2020 தேதியிட்ட 20/2020, செப்டம்பர் 28, 2020 தேதியிட்ட 33/2020, டிசம்பர் 31, 2020 தேதியிட்ட 39/2020, ஜனவரி 13, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.02/2021 மற்றும் டிசம்பர் 08, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.20/2021 (''எம்சிஏ சுற்றறிக்கைகள்'') ஆகியவற்றுக்கு இணங்க பரிந்துரைக்கப்பட்ட நடைமுறை மற்றும் விதிகளின் கீழ் VC/OAVM மூலம் அசாதாரண பொதுக் கூட்டம் நடத்தப்படும். செக்யூரிட்டி எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியாவின் ("SEBI") மே 12, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 மற்றும் ஜனவரி 15, 2021 தேதியிட்ட SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 ஆகியவற்றின்படி VC/OAVM மூலம் அசாதாரண பொதுக் கூட்டத்தை நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது, எனவே நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கான அசாதாரண பொதுக் கூட்டம் VC/OAVM மூலம் நடைபெறுகிறது.

மேற்கூறிய MCA சுற்றறிக்கைகளுக்கு இணங்க, சட்டத்தின் 102வது பிரிவின் விதிகள் மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட திருத்தங்கள் உட்பட மற்றும் SEBI(LODR) ஒழுங்குமுறைகளின் 44வது ஒழுங்குமுறை, 2015 அதன் கீழான திருத்தங்களுக்கு உட்பட்டு அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்புடன் விளக்க அறிக்கை ஆகியவை நிறுவனம் அல்லது முறையே அந்தந்த வைப்பு பங்கேற்பாளர்கள்(DP)/பதிவாளர் மற்றும் பங்குமாற்று முகவரிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளம் https://www.verandalearning.com மற்றும் நிறுவனத்தின் சம பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பிஎஸ்இ லிமிடெட்டின் இணையதளம் www.bseindia.com மற்றும் என்எஸ்இ லிமிடெட் இணையதளம் www.nseindia.com மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டின் (CDSL) இணையதளம் https://www.evotingindia.com–ல் கிடைக்கின்றன.

அசாதாரண பொதுக் கூட்டத்தின்போது தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் மின்னணு வாக்களிப்புக்கான வழிமுறைகள்: சட்டத்தின் பிரிவு 108, நிறுவனங்களின் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014–ன் விதி 20, இன்ஸ்டிடூட் ஆப் கம்பெனி செகரட்டரீஸ் ஆப் இந்தியாவால் அவ்வப்போது திருத்தப்பட்டு, வெளியிடப்பட்ட பொதுக் கூட்டங்களுக்கான செயலக தரநிலை ('SS2') மற்றும் SEBI (LODR) விதிமுறைகள், 2015–ன் ஒழுங்குமுறை 44 ஆகியவற்றுக்கு இணங்க, அசாதாரண பொதுக் கூட்டத்தில் பரிவர்த்தனை செய்யப்பட வேண்டிய வர்த்தகத்தைப் பொறுத்தவரை மின்னணு வழிகளில் தங்கள் வாக்கைப் பயன்படுத்துவதற்கான வசதியை நிறுவனம் அதன் உறுப்பினர்களுக்கு வழங்குகிறது. மேலும் மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதிக்காக CDSL நிறுவனத்தை நிறுவனம் நியமித்துள்ளது. "கட்ஆஃப் தேதி" அதாவது வெள்ளிக்கிழமை, மே 20, 2022 அன்று காகித வடிவில் அல்லது மின்னணு வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், www.evotingindia.com–ல் CDSL–ன் மின்னணு வாக்குப்பதிவு முறை ("தொலைதூர மின்னணு–வாக்களிப்பு") மூலம் மின்னணு முறையில் வாக்களிக்கலாம்.

தொலைதூர மின்னணு வாக்களிப்புக்கான விரிவான வழிமுறைகள் அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் பின்வருவனவற்றைக் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

a. அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சிறப்பு வணிகமானது மின்னணு முறையில் மட்டுமே வாக்களிப்பு மூலம் பரிவர்த்தனை செய்யப்படும்; மின்னணு வாக்குப்பதிவு அல்லது VC/OAVM வசதி மூலம் அசாதாரண பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் செயல்முறை அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பில் உள்ளது; கட்ஆஃப் தேதி அன்று உறுப்பினர் பதிவேடு அல்லது வைப்பாளர்களால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர் இடம் பெற்றுள்ள ஒரு நபர், தொலைதூர மின்னணு வாக்களிப்பு அல்லது அசாதாரண பொதுக் கூட்டத்தின்போது மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியைப் பெற தகுதியுடையவர் ஆவார்;

b. தொலைதூர மின்னணு வாக்களிப்பு செவ்வாய்க்கிழமை, மே 24, 2022 (இந்திய நேரப்படி காலை 9.00 மணி) அன்று துவங்கி வியாழக்கிழமை, மே 26, 2022 (இந்திய நேரப்படி மாலை 5.00 மணி) அன்று முடிவடைகிறது. மே 26, 2022 அன்று மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) மேல் தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொகுதி CDSL–ஆல் முடக்கப்படும். ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்த உறுப்பினர், அதைத் தொடர்ந்து மாற்றி வாக்களிக்க முடியாது.

c. கூட்டத்தின்போது மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதி கிடைக்கும் மற்றும் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள், தங்கள் வாக்கை தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையில் செலுத்தாமல் இருந்தால் மட்டுமே கூட்டம் நடைபெறும்போது மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் அவர்கள் வாக்களிக்க தகுதியுடையவர்கள் ஆவார்கள். உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமையானது, கட்ஆஃப் தேதியான அதாவது வெள்ளிக்கிழமை, மே 20, 2022 அன்று நிறுவனத்தின் செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனத்தில் அவர்கள் வைத்திருக்கும் பங்குகளின் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் இருக்கும்.

d. தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்களும் அசாதாரண பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் அசாதாரண பொதுக் கூட்டத்தில் மீண்டும் அவர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

e. அறிவிப்பை அனுப்பிய பிறகு நிறுவனத்தின் பங்கை வாங்கி, நிறுவனத்தின் உறுப்பினராகி, கட்ஆஃப் தேதி அன்று பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும், helpdesk.evoting@cdslindia.com–க்கு கோரிக்கையை அனுப்புவதன் மூலம் பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். இருப்பினும், ஒரு நபர் ஏற்கனவே CDSL இல் மின்னணு வாக்களிப்புக்காக பதிவு செய்திருந்தால், ஏற்கனவே உள்ள பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லை வாக்களிக்கப் பயன்படுத்தலாம். கட்ஆஃப் தேதி அன்று உறுப்பினராக இல்லாத ஒருவர், அசாதாரண பொதுக் கூட்டம் தொடர்பான இந்த அறிவிப்பை தகவல் நோக்கத்திற்காக மட்டுமே கருத வேண்டும். VC/OAVM மூலம் அசாதாரண பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள மின்னணு வாக்களிக்கப்புக்கு பயன்படுத்தப்படும் உள்நுழைவுச் சான்றை பயன்படுத்தப்படலாம்.

f. மின்னணு முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மற்றும் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாதவர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் மொபைல் எண்களை அந்தந்த வைப்பு பங்கேற்பாளர்களிடம் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அசாதாரண பொதுக் கூட்ட மின்னணு வாக்களிப்பு செயல்முறை மற்றும் மின்னணு வாக்குப்பதிவு முறைக்கான ஆய்வாளராக திருமதி. J. பாரதி, பயிற்சி நிறுவனச் செயலர், சென்னை அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதி தொடர்பான ஏதேனும் கேள்வி/குறைகளை helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தெரிவிக்கலாம்.

வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/
M. அனந்தராமகிருஷ்ணன்
நிறுவன செயலாளர் மற்றும் ஒப்புதல் அதிகாரி

இடம்: சென்னை
தேதி: மே 05, 2022